# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2019 – 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:..............................................................

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இடையின மெய்யெழுத்துகள்

அ) ங் ஞ் ண் ந் ம் ன் ☐ ஆ) ய் ர் ல் வ் ழ் ள் ☐

இ) க் ச் த் ங் ஞ் ன் ☐ ஈ) க் ச் ட் த் ப் ற் ☐

2. தமிழின் இளமைத் தன்மையைக் குறிக்கும் சொல்

அ) பைந்தமிழ் ☐ ஆ) தேன்தமிழ் ☐

இ) தீந்தமிழ் ☐ ஈ) செந்தமிழ் ☐

3. ‘வரும்’ எனும் சொல் குறிக்கும் காலம்

அ) எதிர்காலம் ☐ ஆ) பொற்காலம் ☐

இ) நிகழ்காலம் ☐ ஈ) இறந்தகாலம் ☐

4. மிகவும் பழைமையான இலக்கண நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) தொல்காப்பியம் ☐

இ) திருக்குறள் ☐ ஈ) நாலடியார் ☐

5. பண்டாரவன்னியனின் படைத்தலைவர்

அ) கப்டன் வொன்றிபேக் ☐ ஆ) குலசேகர முதலியார் ☐

இ) வன்னியத்தேவன் ☐ ஈ) கதிர்காமநாயகம் ☐

6. அறுபதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வெள்ளி விழா ☐ ஆ) நூற்றாண்டு விழா ☐

இ) வைர விழா ☐ ஈ) பவள விழா ☐

7. பாடினான் இச்சொல்லின் இடைநிலை

அ) ட் ☐ ஆ) இன் ☐

இ) ஆன் ☐ ஈ ) பாடு ☐

8. பின்வருவனவற்றுள் வினைமுற்று விகுதிகள்

அ) ஐ, ஆல் ☐ ஆ) ஆள், ஆன் ☐

இ) த், ட் ☐ ஈ ) தோறும், தான் ☐

9. கற்சிலைமடுவில் உள்ள கல்வெட்டு நினைவுபடுத்தும் மன்னன்

அ) கயிலைவன்னியன் ☐ ஆ) சங்கிலியன் ☐

இ) பண்டாரவன்னியன் ☐ ஈ ) எல்லாளன் ☐

10. நான் + கு ________________

அ) நானுக்கு ☐ ஆ) உனக்கு ☐

இ) எனக்கு ☐ ஈ ) நனக்கு ☐

11. மங்கை நடனம் ________________ . இச்சொல்லியத்திற்குரிய நிகழ்கால வினைமுற்று

அ) ஆடுகிறாள் ☐ ஆ) ஆடினாள் ☐

இ) ஆடுகிறது ☐ ஈ ) ஆடுவாள் ☐

12. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) மடமட ☐ ஆ) கடுகடு ☐

இ) பொலபொல ☐ ஈ ) மேலேமேலே ☐

13. இலையின் காய்ந்து விட்ட நிலையைக் குறிக்கும் சொல்

அ) சருகு ☐ ஆ) பழுப்பு ☐

இ) கொழுந்து ☐ ஈ) தளிர் ☐

14. மாலையில் மலரும் மலர்

அ) தாமரை ☐ ஆ) செவ்வந்தி ☐

இ) செவ்வரத்தை ☐ ஈ) அல்லி ☐

15. ஈழத்து ஆசுகவி எனப் போற்றப்படுபவர்

அ) காளமேகம் ☐ ஆ) உருத்திரமூர்த்தி ☐

இ) கல்லடி வேலுப்பிள்ளை ☐ ஈ) பாரதியார் ☐

16. 1811 இல் பண்டாரவன்னியன் விழுப்புண்பட்ட இடம்

அ) முல்லைத்தீவு ☐ ஆ) உடையாவூர் ☐

இ) முள்ளியவளை ☐ ஈ) பண்டாரிக்குளம் ☐

17. இயற்றமிழ் என்பது

அ) நாடகமும் நடிப்பும் ☐

ஆ) இசையும் நாடகமும் ☐

இ) இயலும் இசையும் ☐

ஈ) பாடலும் உரைநடையும் ☐

18. இக்கால இலக்கிய வகைகளுள் ஒன்று

அ) புதுக்கவிதை ☐ ஆ) ஐம்பெருங்காப்பியம் ☐

இ) பத்துப்பாட்டு ☐ ஈ) திவ்வியப்பிரபந்தம் ☐

19. ஒருவர் தான் கற்ற கலையை முதன்முதலில் மேடையேற்றுவது

அ) ஒத்திகை ☐ ஆ) வெள்ளோட்டம் ☐

இ) அரங்கேற்றம் ☐ ஈ) பட்டிமன்றம் ☐

20. குறிஞ்சி பள்ளிக்குச் சென்று பாடம் படித்தாள். இச் சொல்லியம்

அ) கூட்டுச் சொல்லியம் ☐ ஆ) தனிச் சொல்லியம் ☐

இ) கலப்புச் சொல்லியம் ☐ ஈ) வியப்புச் சொல்லியம் ☐

21. சென்றான் எனும் வினைமுற்றின் வினையடி

அ) சென்று ☐ ஆ) சென் ☐

இ) சென்ற ☐ ஈ) செல் ☐

22. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தமிழீழத்தின் இறுதித் தமிழ் மன்னன்

அ) எல்லாளன் ☐ ஆ) சங்கிலியன் ☐

இ) பண்டாரவன்னியன் ☐ ஈ) கயிலைவன்னியன் ☐

23. "நீ என் ஊரெலாம் மலர்ந்தாய் கண்டேன்" எனக் கவிஞர் பாடும் பூ

அ) காட்டுமல்லிகை ☐ ஆ) செவ்வந்தி ☐

இ) செவ்வரத்தை ☐ ஈ) முல்லை ☐

24. வீட்டின் பின்புறத்தை ________ என அழைப்பர்.

அ) முற்றம் ☐ ஆ) வயல் ☐

இ) தோட்டம் ☐ ஈ) கொல்லை ☐

25. ஆய்ச்சியரின் கைக்கு வந்தபின் நீர் பெற்ற பெயர்

அ) கார் ☐ ஆ) தயிர் ☐
இ) நீர் ☐ ஈ) மோர் ☐

26. ''வலம்படுவாய்வாள் ஏந்தி....''இப்பாடலைப் பாடியவர்

அ) ஔவையார் ☐ ஆ) கபிலர் ☐
இ) திருவள்ளுவர் ☐ ஈ) காளமேகம் ☐

27. நீ நன்றே செய்தாய். இதில் வந்துள்ள இடைச்சொல்

அ) றே ☐ ஆ) ஆய் ☐
இ) ஏ ☐ ஈ) நீ ☐

28. அடவி என்பது

அ) வீடு ☐ ஆ) நாடு ☐
இ) வயல் ☐ ஈ) காடு ☐

29. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று

அ) மணிமேகலை ☐ ஆ) திருக்குறள் ☐
இ) தொல்காப்பியம் ☐ ஈ) திருவருட்பா ☐

30. விளி வேற்றுமையை ஏற்காத பெயர்ச்சொல்

அ) தங்கை ☐ ஆ) நண்பன் ☐
இ) அவன் ☐ ஈ) அண்ணா ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**தங்கத்தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர். இவர் இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துக் கவிஞர்களில் சிறப்பான இடத்தைப் பெற்றவர். இவர் இயற்றிய உயிரிளங்குமரன் நாடகம் குமுகக் குறைபாடுகளை எடுத்துக் கூறுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேசிய விழிப்புணர்வை உருவாக்க இவரது பாடல்கள் உதவின. குழந்தைப்பாடல்களை இயற்றுவதில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை போன்று ஈழத்தில் முதன்மை பெறுபவர் சோமசுந்தரப்புலவர். இவர் இயற்றிய தாலவிலாசம் என்னும் நூல் பனையின் பெருமைகளைக் கூறுகிறது. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, பவளக்கொடி ஆகிய பாடல்கள் இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றன. அத்துடன் தாடி அறுந்த வேடன், எலியும் சேவலும் ஆகிய கதைப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.**

1. தாலவிலாசம் எதன் பெருமைகளைக் கூறுகிறது?

______________________________

2. சோமசுந்தரப்புலவர் இயற்றிய நாடகத்தின் பெயர் என்ன?

______________________________

3. எலியும் சேவலும் என்ற கதைப் பாடலைப் பாடியவர் யார்?

______________________________

4. சோமசுந்தரப்புலவர் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்?

______________________________

5. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இவரது பாடல்கள் எதற்கு உதவின?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சைவநெறி சார்ந்த இலக்கியங்கள் இரண்டு தருக.

2. தமிழ்மொழியை வளர்த்த கழகங்கள் எத்தனை? அவை எவை?

3. கப்டன் வொன்றிபேர்க் எந்நோக்கோடு பண்டாரவன்னியனுக்குக் கல்வெட்டு நாட்டினான்?

4. முல்லை மலரின் செருக்குக் கவிஞர் கற்பிக்கும் கரணியம் என்ன ?

5. அறிஞர் கூடி எதிர் உரை செய்யும் அரங்கை எவ்வாறு அழைப்பர்?

6. அதியர்மான் நெடுமான் அஞ்சி ஔவையாரை யாரிடம் தூதாக அனுப்பினான்?

7. காளமேகப்புலவர் ‘வசை பாடக் காளமேகம்’ எனச் சிறப்பிக்கப்பட்டது ஏன்?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## நன்றி

| | | | | |
|---|---|---|---|---|
| போற்றி | மறந்தவர் | உணர்வை | நன்மை | பிறர் |

நமக்கு உதவி செய்தோரை
நாளும் ____________ வணங்கிடுவோம்
இமைக்கும் நேரந் தனிலேனும்
எண்ணி வாழ்த்திக் களித்திடுவோம்

நன்றி ____________ வாழ்ந்ததில்லை
நன்றி காத்தவர் தாழ்ந்ததில்லை
நன்றி ____________ ப் பெற்றாலே
நமக்கு வீழ்ச்சி வருவதில்லை

____________ செய்து வாழ்ந்திடுவோம்
நன்றியோடு வாழ்ந்திடுவோம்
தாயைப் போலே ____________ நம்மைத்
தாங்கிப் போற்றுவர் வாழ்வினிலே

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. தரப்பட்டுள்ள வினையடிகளை இறந்தகால வினைமுற்றுகளாக மாற்றி எழுதுக.

ஓடு ______________________

உண் ______________________

விளையாடு ______________________

2. வினைமுற்றுகளின் இடைநிலைகளை எழுதுக.

காண்பர் ________________ ஓடுகிறது ________________

போவான் ________________ சென்றான் ________________

கற்றனர் ________________ தேடினாள் ________________

3. பின்வரும் சொல்லியங்களின் தோன்றா உறுப்புகளை எழுதுக.

அவன் அழகாக வரைந்தான். ______________________

நன்றாகப் பாடத்தைப் படியுங்கள்! ______________________

உனது அம்மா எங்கே ______________________

4. வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

அது ______________________________________________

ஆல் ______________________________________________

இடம் ______________________________________________

5. தொடர்ச் சொல்லியத்தை தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

போராளிகள் பகைவரை எதிர்த்து நின்று, இறுதியில் வஞ்சனையால் வீரச்சாவடைந்தனர்.

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

உண்மையின் சிறப்புப் பற்றிப் பல நூல்கள் கூறுகின்றன. உண்மை பேசுதல் நல்ல பழக்கமாகும். நாம் எப்பொழுதும் உண்மை பேச வேண்டும். நாம் உண்மை பேசினால் எல்லோரும் எம்முடன் அன்பாக இருப்பர். நாம் வாழ்வில் உயர்வும் அடையலாம். ஆனால், பொய் பேசுதல் தீய பண்பாகும். அது எமக்குப் பெருந்துன்பத்தைத் தரும். எனவே நாம் என்றும் உண்மை பேசுவோம். நல்லவர்களாக வாழ்வோம்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- காட்டுமல்லிகை

- உமது தமிழ்ப்பள்ளியும் ஆண்டுவிழாவும்
  - தமிழ்ப்பள்ளி பற்றிய அறிமுகமும்
  - ஆண்டுவிழா நடைபெற்ற காலம்
  - நடைபெற்ற நிகழ்வுகள்
  - நீர் பங்குபற்றிய நிகழ்வுகள்
  - சான்றிதழ் வழங்குதல்

- நீர் சென்ற சுற்றுலா

புள்ளிகள் 20